## இரண்டாம் ஆண்டு நான்காம் பருவம்

## பாட குறிப்பு

அலகு - 1
1. குறுந்தொகை
2. நற்றிணை
3. ஐங்குறுநூறு

### குறுந்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் நல்ல என்னும் அடைமொழி கொடுத்துச் சிறப்பிக்கப்படுவது குறுந்தொகை ஆகும். இதில் அமைந்த பாடல்கள் ~~4 அடி~~ 4 அடி சிற்றெல்லை 8 அடி பேரெல்லை என குறைந்த அடிவரையறையைக் கொண்டதால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. இந்நூல் கடவுள் வாழ்த்துடன் 402 பாடல்களைக் கொண்டது. குறுந்தொகையைப் பாடிய புலவர்கள் 205 பேர் ஆவர். இந்நூல் பிற்கால உரையாசிரியர்களால் மிகுதியாக மேற்கோள் காட்டப்பட்ட நூலாகும். இந்நூலை தொகுத்தவர் பூரிக்கோ

1. செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டோர் கூறியதைக் குறுந்தொகைப் பாடல்வழி விளக்குக.

தலைவி பெற்றோரும் உற்றோரும் அறியாவண்ணம் தலைவனோடு உடன் போக்கு மேற்கொள்கிறாள். அவளைத் தேடி செவிலித்தாய் செல்கிறாள் எதிர் கண்டோரிடம் மகள் பற்றி வினவுகிறாள். கண்டோர் கூறிய குறிப்பே பாடலாக அமைந்துள்ளது.

**பாடல்**

வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவும் ..... .... ...
...... ......

பாடியவர் — (பெரும்பதுமனார்)

என்ற பாடலானது தலைவன் கையில் வில்லும் காலில் வீரக்கழலும் அணிந்திருந்தான். அவனுடன் சென்ற பெண் கையில் வளையலும் மென்மையான பாதங்களில் சிலம்பும் அணிந்திருந்தாள். தோற்றத்தில் சிறந்த நல்ல மக்களாகக் காணப்பட்டனர். அவர்கள் யார் பெற்ற மக்கள் என்பதை நாங்கள் அறியவில்லை. அவர்கள் அன்பு செலுத்துவதற்கு உரியவர்களாக இருந்தனர். கழைக் கூத்தாடிகள் கயிற்றில்

ஒரு இலைகளைப் பனையை நெருங்கி நீரைப் பாய்ச்சினர். அக்கீ போன்ற கோலைக்கொண்ட அடிப்பகுதி வாளைமீனின் வெண்மையான கொம்புகள் அப்பனையின் பனையைப் போல ஒளிர்கிறது அத்தகு பனைத் தெருவில் செல்கின்றது நிறைந்த மாலை நேரத்தில் தனியாகச் சென்றதைக் கூறுகிறார்

(2) கட்டுவிச்சியிடம் குறி கேட்ட செய்தியைத் தோழி அறத்தொடு நின்றதை ஔவையார் பாடல் வழி விளக்குக

தலைவியின் உடல் மெலிவிற்கான காரணம் அறியாத செவிலி கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்கிறாள். கட்டுவிச்சியும் முருகக் கடவுளை வணங்கி தலைவன் மலையைப் பற்றிப் பாடத் தொடங்குகிறாள்.

அகவன் மகளே அகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
........ .... ....
........ ....

(பாடியவர்- ஔவையார்)

குறி சொல்லும் கட்டுவிச்சியே கட்டுவிச்சியே சங்கு மணி போன்ற நல்ல வெண்மையான கூந்தலையுடையவளே நீ இப்போது தலைவனின் மலையைப் பற்றிப் பாடிய பாடலையே மீண்டும் பாடுவாயாக குறி கூறுவதை விட்டுவிட்டுத் தலைவனுடைய நன்மை மிகுந்த நீண்ட மலையைப் பற்றிய அதே பாடலையே மீண்டும் பாடுவாயாக எனத் தோழி கட்டுவிச்சியிடம் கூறுகின்றாள்.

3. வரைவு நீட்டித்த வழித் தலைவி தனது ஆற்றாமையைத் தோழிக்குப் புலப்படுத்திய விதத்தை விளக்குக.

பொருள் தேடச் சென்ற தலைவன் மீண்டு வராததை நினைத்துத் தலைவி வருந்தினாள். தனது வருத்தத்தைத் தோழியிடம் கூறுகின்றாள்.

தலைவனின் பிரிவு தாங்க இயலாத தலைவி தோழியிடம் புலம்புவது

கான மஞ்ஞை அறையீன் முட்டை...

. . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . .

(பாடியவர் - கபிலர்)

தோழியே நீ வாழ்வாயாக காட்டில் வாழும் மயில் பாறையின் மீது முட்டைகளை இடும். அம்முட்டைகளை வெயிலில் விளையாடும் குரங்கின் குட்டிகள் உருட்டி விளையாடும். அத்தகைய மலைநாட்டுத் தலைவன் ஒரு நாள் கொண்ட நட்பு (காதல்) எனக்கு எப்பொழுதும் நன்மையைத் தருவதாகும். தலைவன் பிரிந்து சென்றதால் என் கண்களில் நீர் பெருகுகின்றது. அதைக் கண்டும் மனம் இரங்காமல் பிரிந்து செல்லும் ஆற்றல் மலைநாட்டில் வலிமை உள்ளவர்களுக்கே உரியதாகும். அத்தகைய ஆற்றல் எனக்கு இல்லை எனத் தலைவி தன்னுடைய தோழியிடம் கூறுகின்றாள்.

4. தலைவன் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள நினைத்ததைச் சிறைக்குடி ஆந்தையார் பாடல் வழி விளக்குக.

தலைவன் தலைவியை அடைவதற்குத் தோழியின் உதவியை நாடுகிறான் (தோழி கூற்று)

தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே . . . . . .

. . . . . .

(ஆசிரியர் - சிறைக்குடி ஆந்தையார்)

பெருமைமிக்க மழைக்காலத்தில் மலர்வது பிச்சிப்பூ அப்பூவின் நீர் ஒழுகுகின்ற மொட்டுகள் சிவந்த புறத்தை உடையன. அவற்றைப் போன்ற குளிர்ச்சி பொருந்திய கண்களையும் மழைத்துளிபட்ட தளிர் போன்ற மேனியையும் கொண்டவள் தலைவி. அத்தலைவியும் அவனுடைய உயர்த்

தோழியும் தெப்பத்தை வைத்து நீரில் விளையாடுவர். அப்பொழுது அந்தத் தெப்பத்தின் முன்னால் உள்ள தலைப்பகுதியைத் தோழி பற்றிக் கொண்டு விளையாடுவாள். தலைவியும் அவ்வாறே தெப்பத்தின் தலைப்பகுதியைப் பற்றிக் கொண்டு விளையாடுவாள். பின்னர்த் தோழி தெப்பத்தின் கடைசிப் பகுதியைப் பற்றிக்கொண்டு விளையாடுவாள் தலைவியும் அவ்வாறே அத்தெப்பத்தின் கடைசிப் பகுதியைப் பற்றிக் கொண்டு விளையாடுவாள். தோழி தெப்பத்தை விட்டு நீரில் சென்று விளையாடுவாள். தலைவியும் தோழியைப் பின்பற்றி அவ்வாறே நீரில் சென்று விளையாடுவாள்

5. தலைவி தலைவனுடன் சென்றதைக் அறிந்த செவிலித்தாயின் நிலையைப் புலப்படுத்துக.

தலைவியை ஊட்டி வளர்த்தவள் செவிலித்தாய்.

அவளுக்குத் தெரியாமல் தலைவி தலைவனோடு சென்றதை எண்ணி அச்செவிலித்தாய் வருந்திக் கூறுகின்றாள்

பாடல்

பாலும் உண்ணாள் பந்துடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வோய் ...
.................. அவனொடு செலவே

(ஆசிரியர் — கயமனார்)

செவிலித்தாய் பலமுறை வற்புறுத்தினும் பாலையும் பருகமாட்டாள் தனியாகப் பந்து விளையாடுவதையும் விரும்பமாட்டாள். தோழியரோடே கூட்டமாக ஓயாமல் விளையாடிக் கொண்டிருப்பாள். இப்போதோ தலைவன் மீது அன்பு கொண்டு தோழியரையும் பிரிந்து சென்று விட்டாளே. அவள் சென்ற பாலை நிலத்தில் தண்ணீரைத் தேடிய ஆண் யானைகள் உயர்ந்த கிளைகளையுடைய இமை மரத்தைத் தம் தந்தங்களால் குத்தும். மேலும் அவ்யானைகள் வெயிற்காலத்தில் வெப்பம் மிகுந்த மலைகளின் அடிவாரத்தில் நின்று கொண்டு மழை

மேகங்களின் இடியோசையைக் கூர்ந்து கேட்கும் அப்பாலை நிலம் உலர்ந்த மூங்கில்கள் நிறைந்தது. செல்வதற்கே அரிதான வழிகளை உடையது. அத்தகு வெப்பமான கொடுமை நிறைந்த பாலை நிலமாகும். அப்பாலை நிலவழியில் தலைவனுடன் செல்லுதல் எளிதானது என்று எண்ணி எவ்வாறு தலைவி சென்றாளோ எனச் செவிலித்தாய் புலம்புகிறாள்.

## நற்றிணை

எட்டுத் தொகை நூல்களுள் முதலாவதாக இடம்பெறுவது நற்றிணை. இது நல் என்னும் அடைமொழியோடு திணை என்னும் பெயரும் சேர்த்து வழங்கப்படுகிறது. கடவுள் வாழ்த்தோடு 401 பாடல்களைக் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆனது. சிற்றெல்லை 9 அடி பேரெல்லை 12 அடி ஆகும். இது 175 புலவர்களால் பாடப் பெற்றது. இந்நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. இதற்கு நற்றிணை நானூறு என்னும் பெயரும் உண்டு. ~~[illegible]~~

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைவி கூறிய செய்திகளை நற்றிணைப் பாடல் வழி விளக்குக.

**சொன்ன சொல் தவறாதவர்**

நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்
என்றும் என்தோள் பிரிபு அறியலரே
...... ...... ......

(ஆசிரியர் - கபிலர்)

தலைவர் நம்மைவிட்டுப் பிரிவார் எனக் கூறிய தோழியே

நம் காதலர் சொன்ன சொல் தவறாத வாய்மையுடையவர். அவர் இனிமை தருகின்ற செயலால் எப்போதும் என்னை மகிழ்விப்பார். அதனால் எந்தக் காலத்திலும் என் தோள்களை விட்டுப் பிரிந்திடுவதை விரும்பமாட்டார். குற்றமில்லாத குணத்தினையுடைய அத்தலைவனின் நட்பு சிறந்தது. தாமரையின் குளிர்ந்த பூந்தாதினை ஊதித் தேனை எடுத்துவந்து அதனை மணம் மிகுந்த சந்தன மரத்தின் உச்சியில் கட்டிய இனிய தேனைப் போன்றது. மேலும் தலைவர் இவ்வுலகத்தின் இயல்பை நன்கு அறிந்தவர். திண்ணமில்லாமல்

இவ்வுலகம் இயங்காது அதுபோல அவருடைய அருளில்லாமல் நாம் வாழ மாட்டோம் என்பதை உணர்ந்தவர் அத்தலைவர் ஆதலால் மணம் கமழ்ந்து ஒளிவீசும் நெற்றியைப் பசலை தோன்றும்படியாகவும் நாம் தடுமாற்றம் அடையும்படியாகவும் பிரிந்து செல்லும் சிறுமை செயலைச் செய்ய மாட்டார் இவ்வாறாகத் தோழி தலைவனின் உயர்ந்த இயல்புகளைக் கூறுகின்றாள். இது

விருந்து வாயிலாகப் புக்க தலைவன் தன் நெஞ்சிற்கு சொல்லியதை நற்றிணைப் பாடல் வழி விவரிக்க.

தலைவனின் பரத்தமை ஒழுக்கம் கண்டு தலைவி அவன் மீது கோபம் கொள்கிறாள். தலைவன் தன் வீட்டிற்கு வரும் விருந்தி-னர்களுடன் சேர்ந்து வரும் பொழுது கோபம் கொள்ளாது இன்முகத்துடன் அவனை ஏற்றுக்கொள்கிறாள் தலைவி.

தலைவன் கூற்று

தடமருப்பு எருமை மடநடைக் குழவி
தூண்தொறும் யாத்த காண்தகு நல்இல்
. . . . . . . .

ஆசிரியர் – மாங்குடிக் கிழார்.

தலைவனின் இல்லம்

வளைந்த கொம்புகளை உடைய எருமையின் இளமையான கன்றுகள் தூண்கள் தோறும் கட்டப்பட்டிருக்கும். ~~அத்தகு~~ காண்பதற்கு உரிய தலைவனின் சிறந்த நல்லவீடு. அத்தகைய வீட்டில் காதுகளில் குண்டலங்களை அணிந்து கொண்டு செழுமையுடன் பேதை பருவ தலைவி இருந்தாள். அவள் சிறிய மோதிரத்தைத் தன் விரல்களில் அணிந்திருந்தாள். அம்மெல்லிய விரல்களால் வாளை மீனின் பருத்த அடிக்காம்பினை வலிமையாக அறுத்துச் சமைப்பதற்கு ஏற்றவாறு பக்குவம் செய்தாள். அதனால் அவளுடைய மெல்லிய விரல்கள் சிவந்தன. பின்னர்ச் சோறு சமைத்த புகையால் அவள் கண்கள் சிவந்து காணப்பட்டன. அழகிய வடிவம் கொண்ட பிறை போன்ற நெற்றியில் ஏற்பட்ட வியர்வைத் துளிகளைத் தான் அணிந்திருந்த அழகிய புடவையின் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். மேலும் என்றும் வெறுப்புக்

கொண்டவளாகச் சமையல் அறையில் இருந்தாள்.

## விருந்தினர் வருகை

அப்போது என் வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தனர் அவர்களுடன் நானும் ஒருவனாய்ச் சென்றேன். என்னை விருந்தினர்களுடன் சேர்த்துக் கண்ட போது அழகிய மாமை நிறம் கொண்ட தலைவியின் கண்கள் கோபத்தால் சிவக்கவில்லை மாறாகச் சிறிய கூர்மையான பற்கள் வெளியில் தெரிய இன்முகத்துடன் புன்னகை புரிந்தாள். தலைவியின் இன்முகத்திற்குக் காரணம் விருந்தினரே என்று தலைவன் தனக்குத் தானே கூறிக் கொள்கிறான். அத்துடன் விருந்தினர்கள் நாளும் என் வீட்டிற்கு வந்தால் தலைவி என்மீது கோபமின்றிப் புன்னகையுடன் காணப்படுவாள் என்றும் கூறினான்.

## ஐங்குறுநூறு

ஐந்து திணைகளைப் பற்றிய 500 பாடல்களை கொண்ட தொகுப்பு நூல் ஐங்குறுநூறு ஆகும். அன்பின் ஐந்திணைக்கும் திணைக்கு 100 பாடல் வீதம் 500 பாடல் பாடப்பட்டுள்ளது. 5 புலவர்களால் பாடப்பட்டது. பத்து பத்து பாடல்களாக வரையறுக்கப்பட்டு, இதன் தலைப்பு பாடலின் தொடராலோ பாடுபொருளாலோ பெயரிடப்பட்டுள்ளது.

இங்கு நமக்கு கொடுக்கப்பட்ட பாடப்பகுதி "தலைவி இரங்கு பத்து" இதில் தலைவனே தன் உயிர் எனப்போற்றி வாழ்பவள் தலைவி. அத்தலைவன் பொருளைத் தேடவோ, போர்த்தொழில் நிமித்தமாகவோ தலைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான் அத்தலைவனின் பிரிவை நினைத்துத் தலைவி வருந்திப் புலம்புவதே தலைவி இரங்குதலாகும். இது பத்துப்பாடல்களைக் கொண்டுள்ளது. இதனை பாடியவர் ஓதலாந்தையார் 3 அடி சிற்றெல்லை 6 அடி பேரெல்லையைக் கொண்டுள்ளது

1. தோழியே நான் சொல்வதை கேட்பாயாக தலைவன் செல்கின்ற தற்காலத்தில் சென்ற வழியானது [illegible] வெண்கடம்ப மரங்கள் நிறைந்தது அம்மரங்களில் 'வெள்ளில்' தம் (கலைமான்) தலைவைத் தாண்டி போக்கை ஆதரிக்கும்.

2. தலைவர் அறத்தை மறந்து என்னை விட்டுப் பிரிந்து சென்றார் அவருடைய பயணத்தை இடையில் தடுத்து நிறுத்தாத காட்டு வாழ் விலங்குகளுக்கும் அறம் என்பதே இல்லை எனத் தலைவி நொந்து கூறுகிறாள்

3. தன் துணையைப் பிரியாது வாழ்வது பறவை இனம் அவையும் தலைவருடைய பயணத்தைத் தடுக்கும் வல்லமை பெறவில்லை எனத் தலைவி காட்டில் உள்ள பறவை இனங்களிடம் நொந்து கொள்கிறாள்

4. நான் அழுவதைக் கண்டும் மீண்டு வராத தலைவர் கல்லைப் போன்ற நெஞ்சம் உடையவர் எனத் தலைவி தோழியிடம் புலம்புகிறாள்

5. தலைவர் குறித்த காலத்தில் வராமல் காலம் நீட்டித்தாலும் பரவாயில்லை ஆனால் அவர் எவ்வித இடையூறுமின்றி நலமுடன் திரும்பி வரவேண்டும் எனத் தலைவி தன் ஆற்றாமையைத் தோழியிடம் கூறுகிறாள்

6. களவுக் காலத்தில் என்னை விட்டுப் பிரியமாட்டேன் என்று உறுதிக்கூறியவர் தலைவர். இப்பொழுது நிலையில்லாத பொருளுக்-காகச் சொன்ன சொல்லை மறந்து வெப்பம் நிறைந்த பாலைநில வழியே சென்று விட்டார்.

7. தலைவருக்கு நம்மைவிடப் பொருளே இன்பமாகத் தோன்றுகிறது என்றாள் தலைவி.

8. பிரிந்து செல்லக் கூடாத காலத்தில் பிரிந்து சென்ற தலைவன் கொடுமையானவன் எனத் தலைவி தோழியிடம் இரங்கிக் கூறுகிறாள்.

9. தலைவர் பிரிந்து சென்ற நாட்டில் மாலைப்பொழுது இருந்தும் அவர் என்னை நினைக்கவில்லையே என்றாள் தலைவி.

10. தலைவன் நினைத்துப் பார்க்கும் தகுதி நம்மிடம் இல்லையோ எனத் தலைவி வருந்துகிறாள்.

# கலித்தொகை

எட்டுத்தொகையுள் அகநூல் வரிசையில் காலத்தால் பின் தோன்றிய நூல் கலித்தொகையாகும். 150 பாடல்களைக் கொண்டது. 'கலிப்பா' பாடப்பட்ட நூல். "கற்றறிந்தார் ஏத்தும் கலி" என்னும் சிறப்பை பெற்றது. இஃது ஐந்திணையையும் திணைக்கு ஒருவர் நூலோர் எனப் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல் ஆகும். நாடக பாங்கில் பாடப்பட்ட நூலாகும்.

1. நகை கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன் எனத் தலைவி கூறியதைக் குறித்துக் கலிப் பாடல் வழி விளக்குக.

தான் காதல் கொண்ட தலைவியைக் காண தலைவன் வழியில் காலத்தில் தலைவியின் இல்லின் முன் வந்து செய்யும் செயல்கள்

சுடர்த்தொடீஇ கேளாய் .......

(பாடல் ஆசிரியர் – கபிலர்)

தலைவி சிறுபருவத்தில் தன் தோழியர் கூட்டத்துடன் விளையாடிக் கொண்டிருந்தாள். அச்சமயம் தலைவன் பலவாறான இடையூறுகளைச் செய்தும், அவளை பரிகாசம் செய்தும் வந்தான். அவனே தலைவியைக் காணும் நோக்குடன் வழியற்ற காலைப் பொழுதில் தலைவியின் இல்லிற்கு முன் வந்து, வழிபோக்கர் போல் குடிக்க தண்ணீர் வேண்டி நின்றான். தண்ணீர் எடுத்து வந்த என்னுடைய கையைப் பற்றி இழுத்து ஓடினான். அப்போது அம்மா என்று அலறி என் தாயை அழைத்து அவனை பரிகாசம் செய்தேன் பின்னர் அவன் என்னை கொல்வான் போல் கடைக்கண்ணால் நோக்கி புன்னகை செய்து சென்றான்.

2. தலைவன் தெருளாதவனைத் தோழி தெருட்டி வரைவு கடாயதை நெய்தல் கலிப்பாடல் வழி விளக்குக.

கலித்தொகையின் ஐந்தாவது பகுதியாக அமைந்தது நெய்தற்கலி ஆகும். இது 33 பாடல்களைக் கொண்டது. இதனைப் பாடியவர் நல்லந்துவனார். அந்துவனார் என்பது இவர்

இயற்றியவர்.

மாமலர் முண்டகம் தில்லையொடு ஒருங்குடன்

- - - - - - - - - - - - - - - -

- - - - - - - போற்றாரைப் பொறுத்தல்.

ஆசிரியர் — நல்லந்துவனார்

கடலின் கரைக்கு அழகு செய்வதுபோல் காற்றால் குவிக்கப்பட்ட மணல்மேடுகள் உயர்ந்து காணப்பட்டன. அம்மேடுகளைச் சுற்றிக் கருநீல மலர்கள் பூத்துக் குலுங்கக் கழிமுள்ளியும் தில்லைச் செடிகளும் ஒன்றாகச் சேர்ந்து வளர்ந்திருந்தன. அங்குத் தென்னகக் கடவுளாகிய சிவபெருமான் ஆலமர நிழலில் வைத்திருந்த கலசத்தைப் போன்ற பழங்கள் தாழை மரத்தின் வளைந்த மடல்களில் தொங்கிக் கொண்டிருந்தன. அத்தாழையால் பூத்திருக்கும் வெள்ளைப் பூப்போல அம்மரத்தின்மீது கடல் நாரை ஒன்று அமர்ந்திருந்தது அந்நாரையைப் போல எதற்கும் கவலை-யின்றி இருக்கின்ற கடற்கரைக்குத் தலைவனே! நான் சொல்வதைக் கேட்பாயாக.

ஆற்றுதல் என்பது வறுமையால் துன்பப்படுபவர்களுக்கு ஒன்றைக் கொடுத்து உதவுதல்

போற்றுதல் என்பது தம்மோடு கூடி உறவு கொண்டோரை எப்போதும் பிரியாது இருத்தல்

பண்பு என்பது உலகத்தின் நடப்பு தெரிந்து நடத்தல்

அன்பு என்பது தம் சுற்றத்தாரிடம் எச்சூழலிலும் சினம் கொள்ளாமை

அறிவு என்பது அறிவற்ற பேதைகள் தன்னைப் பார்த்து இழிவாகப் பேசு-கின்ற பேச்சை பொறுத்துக் கொள்ளுதல்

செறிவு என்பது கூறியது மாறாமை (சொன்ன சொல் மாறாமை)

முறை என்பது தீங்கு செய்தவர் தமது உறவினர் ஆயினும் அவரிடம் தயவு காட்டாது தண்டித்தல்

பொறை என்பது தம்மை போற்றாதவர்களிடமும் பகை கொள்ளாத பொறுமையோடு இருத்தலே ஆகும்.

# சிறுபாணாற்றுப்படை

திணை : பாடாண் திணை
துறை : ஆற்றுப்படை

## ஆற்றுப்படை பெயர்க்காரணம்

பரிசில் பெற்ற இரவலன் ஒருவன் அப்பரிசிலைப் பெற விரும்பும் மற்றொரு இரவலனைப் பார்த்து நான் செல்லும் வழியில் சென்றால், தலைவனைக் கண்டு பெரும் பொருளைப் பெற்று உன் வறுமையைப் போக்கிக் கொள்ளலாம் என வழி கூறுவதே ஆற்றுப்படை ஆகும். இது கூத்தர், பாணர் பொருநர், விறலி, புலவர் ஆகியோரிடையே நிகழும்.

## சிறுபாணாற்றுப்படை

சிறிய யாழ் (குறைந்த நரம்பு எண்ணிக்கையுடைய யாழ்) வாசிக்கும் பாணனை சிறுபாணன் என்று அழைக்கப்பட்டனர் இவர்கள் குறித்து பாடியதே சிறுபாணாற்றுப்படையாகும். இது 269 அடிகளையுடைய ஆசிரியப்பாவால் எழுதப்பட்டதாகும். இதன் ஆசிரியர் நத்தத்தனார். பாட்டுடைத்தலைவன் ஒய்மாநாட்டு நல்லியக்கோடன் ஆவான். ஆசிரியர் குடியில் பிறந்தவர்.

அந்நாள் சேர, சோழ, பாண்டியர்கள் கொடுக்கும் பரிசை விட நல்லியக்கோடன் கொடுக்கும் பரிசு பெரிது (அதிக அளவு) எனக் குறிப்பிடுகிறது.

## 1. சிறுபாணாற்றுப்படை காட்டும் வேனில் காலத்தின் இயல்பு

நிலமகளின் அழகிய மார்பு போல விளங்குவது மலைகள் ஆகும். அம்மார்பில் கிடந்து அசைகின்ற முத்து மாலையைப் போல ~~காட்சி~~ அருவிகள் காட்சியளிக்கின்றன. காட்டாற்றின் கரையில் உள்ள மரங்களின் பூக்களைக் குயில்கள் தம் அலகால் கொத்தி உதிர்த்தன. அவை நிலமகள் தம் கூந்தலில் பூச்சூடியது போல காட்சி அளித்தது. அந்நுண்ணிய கரிய மணல் இரும்பானது வெப்பத்தை ஏற்ற தன்மை போன்று மிகுதியான வெப்பத்தை உடையதாய்

இருந்தன. அத்தகைய வெம்மையான மணல் வேனில் காலத்தில் காலை மாலை பொழுதுகளில் நடந்தாலும் அங்குள்ள பரற்கற்கள் கால்களை குத்தி கிழித்து துன்பத்தை ஏற்படுத்தும்.

விறலியின் தோற்றப் பொலிவை விளக்கு?

வெப்பம் மிகுந்த கோடைக்காலத்தில் இளைப்பாறும் பாணன் தம்மோடு வந்துள்ள தம் விறலியின் அங்க அழகு மற்றும் பண்புகளை வர்ணித்தல்

கூந்தல் :

உலகிற்கு நன்மை செய்யும் மெல்லிய பொழிவையும் ~~மழைப் பொழிவின் உ~~ மழையினை வழங்கும் கருமையான மேகத்தின் நிறத்தையும் கொண்ட கூந்தல்

மென்மை :

அன்ன மயிலின் தோகையினும் மென்மையான கூந்தல்

அடி : நாயின் நாவை போன்று நடந்து இளைத்த அணிகலன் அணியாத மெல்லிய பாதம்

தொடை : மேலே பருத்தும் கீழே மெலிந்தும் காணப்படும் யானையின் துதிக்கையை ஒத்த தொடை

செறிந்த கூந்தல் : வாழைப்பூ போன்ற கூந்தல்

தேமல் : கூந்தலில் அணியப்பட்ட வேங்கை மலரின் நிறத்தை ஒத்த தேமல்

மார்பு : கோங்க மரத்தின் மொட்டினை ஒத்தை மார்பு

உமிழ்நீர் : நுங்கின் நீர் போல் இனிமையான உமிழ்நீர்

பல் : முல்லைப் பூ போன்ற கூரிய வெண் பற்கள் என விறலியின் பல அங்கங்கள் வர்ணிக்கப்பட்டுள்ளது

கடையேழு வள்ளல்களின் சிறப்புகளாகச் சிறுபாணாற்றுப்படை கூறும் செய்திகள் யாவை?

வறுமையுற்ற பாணனைப் பார்த்துப் பரிசில் பெற்ற பாணன் நல்லியக்கோடனிடம் சென்றால் பெரும் பொருளைப் பரிசாகப் பெறுவாய் என்று ஆற்றுப்படுத்துகிறான். அந்நல்லியக்கோடன் கடையேழு வள்ளல்களைவிட மேலானவன் என்பதை எடுத்துரைக்கிறான்.

பேகன்: மலையில் அகவிய மயில், அதனை கண்ட பேகன் அது மழையின் குளிரால் வருந்தி அகவுவதாக எண்ணி தனது போர்வையை மயிலுக்கு போர்த்தி எல்லா உயிர்களிடத்தும் கருணை கொண்டவனாக திகழ்கிறான்.

பாரி: சுரபுன்னை நிறைந்த காட்டின் வழியே பாரியின் தேரானது விரைந்தோட அங்கு இடைமறித்ததுபோல முல்லைக் கொடி படர்ந்து வளர்ந்தது. அது தனது தேரில் பட்டு அறுந்து வாடாமல் தனது தேரை அக்கொடி பற்றி வளர்வதற்கு நிறுத்தினான்.

காரி: மலையமான் திருமுடிக்காரி வெள்ளைக் குதிரை ~~[illegible]~~ மற்றும் தனது நாட்டை இன்சொல்லோடு இரவலர்க்குக் கொடுத்தான்

ஆய் (அண்டிரன்): வளைய தோளினையும் இனிய பேச்சினையும் உடைய ஆய் அண்டிரன் ஒளிமிக்கதாய் விளங்கும் நீலமணி நாகம் கொடுத்த ஆடை ஆகிய இரண்டையும் ஆலின்கீழ் வீற்றிருக்கும் இறைவனுக்கு ~~பரிசாக~~ விருப்பமுடன் கொடுத்தான்

அதிகன்: சாகா வாழ்வளிக்கும் அமுதத்தை ஒத்த பெருநெல்லியை தான் உண்ணாது தமிழ் வளர்த்த ஔவைக்கு கொடுத்து மகிழ்ந்தவன் அதியமான்.

நள்ளி: தன் இன மக்களோடு இனிமையாக பேசும் குணம் பெற்ற நள்ளி என்பான் பிற நிலை சூழல் அறிந்து அவர்கள் கேட்காமலே வாரி வழங்கும் குணம் கொண்டவன்

ஓரி: ~~மலை வளம் மிக்க~~ ஓரி மலைநாட்டு அரசனாகிய ஓரி குன்றுகள் நிறைந்த வளமான ஊர்களை கூத்தர்களுக்கு பரிசாக வழங்கினான்.

இவ்வாறாக தன்னை நாடி வந்தவர்களுக்கு கடையெழு வள்ளல்கள் மனம் உவந்து பரிசு வழங்கினார்.

## நல்லியங்கோடனின் சிறப்புகள்

தமிழகத்தில் சிறந்து விளங்கும் குடிகளுள் ஒன்று ஓவியர் குடி ஆகும். அக்குடியின் புகழை மேலோங்கச் செய்தவன் நல்லியங்கோடன். எவரும் செய்த ஈகையைத் தான் ஒருவனாக இருந்து சிறப்புறச் செய்தவன். அவன் சுரபுன்னை, அகில் சந்தனம் ஆகிய மரங்களை நீராடும் மகளிர்க்குத் தெப்பமாக மலை நீர் கொண்டு வந்து தருகின்ற வளமுடையவன், பகைவர் சூழ்ந்து அழிக்க முடியாத அரணைக் கொண்டதாய்த் தோன்றிய போதே நல்ல இலங்கை எனப் பெயர் சூட்டப்பட்டது மாவிலங்கை அந்நகரை ஆண்ட மன்னர்களுள் சிறந்தவன். வாளால் பகைவரை வீழ்த்தி வெற்றி பெற்றோரும் புலி போல்வாரும் பிறந்த ஓவியர் குடியில் தோன்றியவன் யானைப் படையைச் செலுத்தித் தாண்டியதால் உண்டான தழும்பு கிடந்த காலில் வீரக்கழலை அணிந்தவன். இரவலர்க்கு யானைக் கூட்டங்களைப் பரிசிலாகத் தரும் மழை போன்ற கையை உடையவன். இசைக் கருவிகள் மீட்டும் கூத்தரை மிகவும் போற்றுபவன். அத்தகு பெரும்புகழ் உடையவன் நல்லியங்கோடன் ஆவான்.

பாடினியின் வறுமை வாழ்க்கையையும் நல்லியக்கோடனின் கொடைத் திறத்தையும் விளக்குகிறது.

வறுமையுற்ற பாணனை நல்லியங்கோடனிடம் ஆற்றுப்படுத்த விரும்புகிறான் மற்றொரு பாணன். அவன் நல்லியங்கோடனைக் காண்பதற்கு முன் வறுமையால் துயருற்ற நிலையையும் பின்னர் நல்லியங்கோடனிடமிருந்து பெரும்பொருள் பெற்ற நிலையையும் எடுத்துரைக்கிறான்.

### பாணர் குடியின் நிலை

வறுமையின் பிடியில் சிக்குண்டு கிடந்தனர் பாணர் குடும்பத்தினர். அவர்களின் வீடானது இடிந்தும் கரையான் செல்லரித்தும் பாழடைந்த நிலையில் காணப்பட்டன. அங்கு, ஈன்றணைந்த குட்டி சுவரின் பக்கத்தில் நாய் குட்டிகளை ஈன்றது. அதனால் குட்டிகளுக்குப் பால் கொடுக்க

மடியா நினைவால் மெலிந்து காணப்பட்டது. விறலியும் தனது குடும்பத்தினரின் பசியை போக்க, குப்பைக் கீரையை (வேளைக்கீரையைக் கிள்ளி உப்பில்லாமல் வேக வைத்து கடைந்து தனது ~~சுற்றத்~~ குடும்பத்தாரோடு உண்டாள்.

## நல்லியக்கோடனின் கொடைச்சிறப்பு

கொடிய பசித்துன்பத்தைத் முற்றிலும் தீருமாறு உதவினான் நல்லியாங்கோடன் எங்களுக்கு இரு பக்கமும் யானை பூட்டிய தேரில் பெரும் பொருள்களைப் பரிசாக கொடுத்தான். அதனைப் பெற்று நாங்கள் அவனிடமிருந்து மகிழ்வுடன் விடைபெற்று வந்தோம். நீங்களும் உங்கள் சுற்றத்தாரோடு அங்குச் சென்றால் பெரும்பொருளைப் பரிசிலாகப் பெற்று மகிழலாம் எனப் பரிசில் பெற்ற பாணன் அதனைப் பெற இருப்பவனிடம் கூறினான்.

நத்தத்தனார் காட்டும் நெய்தல் நிலச் சிறப்பை விளக்குக.

நல்லியங்கோடனிடம் பரிசு பெற்ற பாணன் பரிசு பெறப் போகும் பாணனிடம் நல்லியாங்கோடன் இருக்கும் நகரினைச் சுட்டி அதற்கு முன்புள்ள நெய்தல் நிலத்தின் சிறப்புகளைக் குறிப்பிடுகிறான்.

## எயிற்பட்டினம்

எயிற்பட்டினத்தில் கடல் அலை மோதுகின்ற கரை காணப்படும். அங்கு அன்னத்தை ஒத்த தாழை மலர்கள் மலர்ந்துக் கிடக்கும். செருந்தி மலர் பொன்போல் பூத்திருக்கும். நீர் முள்ளி நீலமணி போன்ற பூக்களை பெற்றிருக்கும். புன்னைமரத்தின் முத்துப்போன்ற மொட்டுக்கள் மலர்ந்து காணப்படும். உப்பளங்களின் நிறைந்த ஊர்கள் வரும். அதனைக் கடந்தால் பெரிய மதில்களை உடைய எயிற்பட்டினத்தை அடையலாம். அகில், சந்தம் போன்ற மரங்கள் ஒட்டகம் உறங்குவதுபோல் குவிக்கப்பட்டிருக்கும்.

## நுளைச்சியரின் விருந்தோம்பல்:

நிலவுபோன்ற முகத்தையும், கூரிய வேல் போன்ற கண்களையும் உடைய நுளைச்சியர் களிப்பு மிகுந்த பழைய கள்ளை வடிகட்டித் தருவார்கள். அதனைப் பரதவர் அவ்வழியில் செல்வோர்க்கு பகுக்கக் கொடுப்பர். சோலைகள் நிறைந்து கிடக்கும் என்றும் ஊரின் தலைவனை புகழ்ந்து பாடுகுடியானையான் தானத்திற்கு இறப்ப மகளிர் தருவர். அவ்வழியால் சென்றால் குழல்மீன் கறியை வீடுகள்தோறும் பெற்றுச் செல்லலாம்.

நத்தத்தனார் காட்டும் முல்லை நில மாண்பையும் வேலூரின் சிறப்பையும் தொகுத்துரை.

எயிற்பட்டினத்தைத் தாண்டிச் சென்றால் முல்லை நிலத்தையும் அதனைச் சார்ந்த வேலூரையும் அடையலாம்.

முல்லை நிலத்தின் அழகு :

எயிற்பட்டினத்தை அடுத்த முல்லை நிலத்தில் அவரைக் கொடி பவளம் கோத்தாற் போன்று பூத்துக் கிடக்கும். மயிலின் கழுத்தை ஒத்த கரிய நிறத்தில் காயாம்பூ பூத்திருக்கும். முசுண்டைக் கொடி வெண்பட்டு போன்ற அழகிய பூக்களைத் தொங்க விடும். கொத்தாக மலர்ந்த காந்தள் பெண்களின் விரல் போன்று காட்சியளிக்கும். வீட்டின் முன்புறத்தில் இந்திரகோபப் பூச்சிகள் ஊர்ந்து செல்லும்.

அங்கு மணமிகுந்த முல்லைக் கொடி பூக்கும் மாலை வேளையில் அழகு மிக்க வேலூரை அடைவர்.

எயினர் விருந்து :

இனிய புளியை இட்டு காட்டுப் பசுவின் இறைச்சியை சமைத்து அவ்வழியில் செல்வோர்க்கும் கொடுத்து மகிழ்வர். மாந்தளிர் போன்ற நிறத்தை உடைய அப்பெண்கள் கொடுக்கும் உணவை உண்டு நீங்கள் மகிழலாம்.

மருத நிலத்தின் மாண்பையும் ஆமூரின் சிறப்பையும் விளக்குக.

மருத நிலத்தின் மாண்பு :

தொடுத்த மாலை போல் பூக்களைக் கொண்ட கிளை, குவிந்த அடி ஆகியவற்றைக் கொண்டது காஞ்சி மரம். அதன் வளைந்த கிளையில் அமர்ந்து நீர்நிலைகளில் திரிகின்ற மீனைக் கொத்தி உண்பதற்காக உற்ற நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது மீன்கொத்திப் பறவை.

அக்குளங்களில் உள்ள தாமரை மலரிலுள்ள தேனை உண்ண (ஊதா) நீல நிறத்தையும் சிவந்த கண்களையும் உடைய வண்டுகள் வந்து மொய்க்கும். அது நீலக் கரிய பாம்பு உறங்குவது போல காட்சியளிக்கும்.

இத்தகைய சிறப்பு மிக்க செழித்த வயல்களை உடையது மருதநிலம். இங்கு நல்ல காவலரும் சான்றோரும் நிறைந்து இருப்பர். செழித்த அகழிகளும் காணப்படும். இங்கு சிறப்பு பொருந்திய

நல்லியக்கோடனின் ஊராகிய ஆமூர்.

## உழவனின் விருந்தோம்பும் பண்பு

மருத நில மகளிர் வளைய கரங்களால் தன்வீட்டின் முற்றத்திலிருக்கும் உலக்கையால் இரும்புப்பூண் தேயுமாறு வெண்ணெல்லைக் குற்றுவர். அவ்வரிசியால் செய்த ~~சோ~~ சோற்றுடன் பிளந்த கால்களை உடைய நண்டுக்கறியைக் கலந்து தருவர். அவற்றை வாங்கி உண்டு மகிழ்வீராக.

நல்லியக்கோடனின் அரண்மனைச் சிறப்பையும் அவனைப் பலரும் போற்றும் முறையையும் விளக்குக.

## அரண்மனைச் சிறப்பு:

நல்லியக்கோடனின் அரண்மனை பொருநர் புலவர் அரிய வேதத்தினை ஓதும் அந்தணர் முதலியோர் வந்து செல்வதற்காக எப்போதும் திறந்தே இருக்கும் அவ்வாயில் மேருமலை கண்ணைத் திறந்து பார்ப்பது போன்ற தன்மைக் கொண்டது. அது பிறர் புகுவதற்கு அரியதாகும்.

## சான்றோர் புகழும் முறை:

அவ்வாயிலைக் கடந்து சென்றால் அங்கு நல்லியக்கோடன் வீற்றிருப்பான். அவனுடைய செய்ந்நன்றி அறிதல், சிற்றினம் சேராமை, இனிய முகமுடையனாதல், அகம், புறம் என்னும் இரண்டாலும் இன்மை உடையவனாதல் ஆகிய சிறப்புகளை அவன் பக்கத்தில் நின்ற சான்றோர் புகழ்ந்து கூறுவர்

## படை வீரர் போற்றும் முறை:

~~நல்லியக்~~ நல்லியக்கோடன் தன் வீரத்தைக் கண்டு அஞ்சித் தன்னிடம் மண்டியிட்டவருக்கு அருள் செய்வான். தன் எதிர்க்கும் பகைவர் கூட்டத்தின் உள்புகுந்து அவர்களின் வீரத்தை கெடுத்து வெல்லும் திறன் பெற்றவன். படையினருக்கு வீரவுரைக் கூறிப் போர்ச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவன் இச்செயலைப் போர்வீரர் இருபக்கம் நின்று வியந்து போற்றுவர்.

## பெண்கள் போற்றும் முறை:

தன்னிடம் ஊடல் கொண்ட மகளிரின் ஊடலை எளிதில் போக்கிப் புணருமாற்றல்; பெண்களால் பெரிதும் விரும்பப்படும் தன்மை; பெண்களுக்குத் தான் அடிமையாகாமல் பெண்களை அடிமையாக்குதல்; பெண்டிரின் வருத்தத்தை உணர்ந்து

அவர்களுக்கு அருளிப் பாதுகாத்தல் ஆகிய நல்லியக்கோடனின் சிறப்புக்களைப் பெண்கள் எடுத்துக்கூறிப் போற்றி மகிழ்வர்.

பரிசிலர் புகழும் முறை:

நல்லியக்கோடன் அறிவில்லாதவர் முன் அறிவிலார் போல அடங்கி நிற்பான். அறிஞர்களின் நகைக்கு அறிஞனாகத் திகழ்வான். பரிசிலர்களின் நிலையறிந்து தகுதிக்கேற்பக் கொடுப்பான். சிறப்பில்லாதவருக்கும் இல்லை எனக் கூறாமல் கொடுக்கும் தன்மை கொண்டவன். இவ்வாறாக பரிசிலர் போற்றிப்புகழ்வர்

அரசு வீற்றிருத்தல்:

வானத்தில் விண்மீன்கள் புடைசூழ அதன் நடுவே ஒளிவீசும் சந்திரன். அதுபோல அரிய மகிழ்ச்சியைச் செய்யும் அறிஞர், வீரர், பெண்டிர், பரிசிலர் ஆகியோரின் ~~கூ~~ கூட்டத்திற்கு இடையே அரசு வீற்றிருப்பவன் நல்லியக்கோடன் ஆவான்.

நல்லியக்கோடன் பரிசிலரைப் போற்றும் முறையை விளக்குக.

வறுமையுற்ற பாணனே உன் யாழினை மீட்டி நல்லியக்கோடனின் புகழ்களை நீ எடுத்துக் கூற வேண்டும். அவ்வாறு கூறும்போது நம்மை எதிர்கொண்டு வரவேற்பான். மூங்கிலின் உட்பகுதியை ஒத்த வெண்ணிற ஆடையைத் தருவான். பெருமயக்கத்தை உண்டாக்கும் கள்ளினைப் பருகத் தருவான். பாண்டவர்களுள் ஒருவனான வீமன் எழுதிய சமையல் நூலின் வழிப்படி ~~[illegible]~~ பல்வேறு சுவையுடைய அடிசிலைச் சமைத்துத் தருவான். பொற்கலத்தில் இட்டு ~~[illegible]~~ உண்ணச் செய்வான்.

பரிசிலர்க்கு உடை, கள், உணவு ஆகியவற்றை நன்று கொடுக்கும் நல்லியக்கோடனின் கொடைச் சிறப்பை

காம்பு சொலித் தன்ன அறுவை உடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கி
- - - - - - -
பனைவலன் வாழ்நாள் பல்வேறு அடிசில்

என நத்தத்தனார் எடுத்துரைக்கிறார்

நல்லியக்கோடன் இரவலருக்குப் பரிசில் நல்கும் சிறப்பினை விளக்குக.

வலிமை வாய்ந்த பகைவரைத் தத்தம் நிலத்தைக் கைவிட்டு ஓடச் செய்கின்ற வலிமையையும் வெற்றியையும் உடையவன் நல்லியக்கோடன். அவன் வெற்றி பொருந்திய வேலினை உடைய பகைமன்னர்களின் வலிய அரண்களை

அழித்தவன் தம்மால் வெல்லப்பட்ட பகைவரிடமிருந்து பெற்ற மலை போன்ற பொருள்களைத் தன்னை நாடி வந்த இரவலர்களுக்கு கொடுத்து அவர் தம் வறுமைத் துயரைப் போக்குவான், தம்மை எதிர்த்துப் போர் செய்ய முடியாமல் அடங்கப்பட்ட அரசரிடமிருந்து மிகுதியான திறைப்பொருளைப் (கப்பம்) பெறுவான் அப்பொருள்களோடு கார்காலத்தில் ஒளிவீசும் சந்திரனைப் போன்று வட்ட வடிவமாய் அமைந்த சக்கரம் முருக்கமலர் போல் சிவந்து தோன்றும் அரக்குப் பூசப்பெற்ற தட்டு வல்லமைமிக்க தச்சர்கள் தொழிலை முடித்தவுடன் தேர்வல்லவரால் வெள்ளோட்டம் விடப்பட்டுச் சிறப்பு-டையது எனச் சான்று வழங்கப்பட்டதாகிய தேர்; குதிரைகளை அடக்கிக் கொண்டு விரைந்தோடும் ஆற்றல் பெற்ற எருது; அதனை ஓட்டும் ஆற்றல் கொண்ட பாகன் ஆகியவற்றுடன் யானை, குதிரை அணிகலன் ஆகியவற்றைக் கொடுத்து அன்றே செல்க என வழியனுப்புவான் நல்லியக்கோடன்.

நல்லியக்கோடனின் மலைச்சிறப்பைப் புலப்படுத்துக.

மெல்லிய தோளினையும் தேமல் அணியும் அல்குலையும் அசைந்து வரும் நடையினையும் உடையவர் கொல்லி மகளிர். அவர்கள் மயில் தோகையை ஒத்த தம் கூந்தலை (ஓதியை) அகில் சந்தனம் போன்ற நறுமணம் வீசும் மரத்தின் புகைக்கொண்டு உலர்த்துவர். மேகங்கள் தவழ்ந்து செல்லும் அளவிற்கு உயர்ந்த மலையை உடைய மலைநாட்டின் அரசன் நல்லியக்கோடன் இவன் எப்போதும் புகழ் தன்னை நினைத்து நிற்கத்தக்க கொடைத்தன்மை மிக்கவன். அவனை அடைந்தால் உம் துன்பம் எல்லாம் நீங்கும் எனப் பாணன் எடுத்துரைக்கிறான்.

அலகு III அகநானூறு

தமிழரின் அக வாழ்வியலை மிக விரிவாகப் பேசும் நூல் அகநானூறு ஆகும். நானூறு என்பது பாடல் எண்ணிக்கையால் அமைந்த பெயர். புறத்தொகை நூல்களை விட இது மிகுதியான அடிகளைக் கொண்டதால் நெடுந்தொகை நானூறு எனவும் அழைக்கப்படுகிறது. இந்நூல் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1 - 120 பாடல்கள் வரை உள்ளவை களிற்றியானை நிரை என்றும் 121 - 300 வரை உள்ள பாடல்களை மணிமிடை பவளம்

என்றும். 300-400 வரை உள்ள பாடல்களை ~~நித்திலக்~~ நித்திலக் கோவை என்றும் கூறுவர் (நித்திலம் - முத்து). இங்கு முதல் பாடலை நாயன்கண்ணனாரும் இரண்டாம் பாடலை சேரமான் இளங்குட்டுவனும் பாடினர்.

உடன்போக்கிற்குச் சென்ற தலைவியை நினைத்து நற்றாய் வருந்திக் கூறியதை அகநானூற்றுப் பாடல் வழி விளக்குக.

நல்ல மலைநாட்டுத் தலைவன் தலைவியைப் பொய்யாகப் புகழ்ந்து பாராட்டினான். அதனை உண்மை என்று நினைத்துச் செல்வ வளம் மிக்க வீட்டை விட்டுக் கொடிய பாலை நிலத்தின் வழியாகத் தலைவனுடன் செல்வதற்கு என் மகளுக்கு எவ்வாறு மனம் வந்தது என்று நற்றாய் வருந்திப் புலம்புகிறாள்.

தலைவியின் செல்வ நிலை:

பாலோடு தேன் கலந்து பொன்னாலாகிய பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு ஊட்டச் செல்வாள் செவிலி. தலைவியோ தோழியரோடு விளையாடிக்கொண்டு மறுப்பாள். கிளர்ச்சியும் செல்வ செழிப்பும் மிக்க எங்கள் குடியைப் பொருள்படுத்தாது, தலைவனோடு உடன்போக்கு மேற்கொண்டாள்.

உடன்போக்கு மேற்கொள்ளல்:

பழங்குன்றுகளையும் வேங்கை மரங்களையும் கொண்ட மலை நாட்டின் தலைவனின் பொய்யான புகழுரைகளைக் கேட்டு மயங்கி எங்களை விட்டுத் தலைவி அத்தலைவனோடு உடன்போக்கு மேற்கொண்டாள்

உடன்போக்கில் சென்ற பாலைநிலத்தின் கொடுமை:

பந்தை அடித்ததைப் போன்ற தாள ஓசையுடன் குதித்துச் செல்லும் ஆற்றல் கொண்டது குதிரை. அக்குதிரைப் படையை உடைய எழினி என்னும் அரசன் தன்னோடு பகைமை கொண்ட அரசனோடு போரிட வேனில் காலத்தில் செல்வான். பகைவர் நாட்டில் உள்ள பசுக்கள், காளைகளையும் கவர்ந்து பாலை நிலத்தின் வழியே வருவான் அங்கு பாறை கற்கள் வெடித்து சிதறி கூர்மையாகக் கிடக்கும். அக்கொடுமை நிறைந்த பாலை வழியாய் தலைவனுடன் நடந்து செல்ல எவ்வாறு துணிச்சல் ஏற்பட்டதோ? நான் அறியேன் என நற்றாய் வருந்திக் கூறினாள்

மகட்போக்கிய செவிலித்தாய் தன் வருத்தத்தைக் கூறியதை புலப்படுத்துக.

தனது வளர்ப்பு மகள் தலைவனுடன் உடன்போக்குச் சென்று விடுகிறாள். அவளுடைய நிலையை அறிந்த செவிலித்தாய் வருந்தி கூறுகிறாள்.

<u>செவிலித்தாய் புலம்பல்</u>:

என்மகள் மிகவும் இரக்கம் காட்டுவதற்கு உரியவள். ~~அத~~ அவள் தனது தோழியருடன் பந்தாடும் போது பந்து சிறிது தூரம் சென்றாலும் அதனை எடுத்துவர என்பாதம் நோகும் என்பாள் அத்தகு மென்மையான இயல்புடையவள் என்மகள்.

<u>பாலையின் கொடுமை</u>!

உயர்ந்த மலைச்சாரலில் வண்டுகள் மொய்த்து ஆரவாரிக்கும் மலர்க் கொத்துக்களையுடையதாய் விளங்குவது கோங்கமரம். அதன் பூக்கள் இரவில் நட்சத்திரம் போல காட்சியளிக்கும். புன்னை கருமையான காற்றில் கீழ் விழுந்து மணம் பரப்பும். ~~[illegible]~~ அம்மலர்கள் தீப்பொறிப் போன்றும் காட்சியளிக்கும் இவ்வாறு காணப்படுவது மேகங்கள் தவழும் பெரிய மலை இருக்கக நிற்கின்ற பாலை வழியாகும்.

<u>செவிலியின் புலம்பல்</u>:

அப்பாலை நிலத்தில் வேனிற்காலக் கதிரவனின் வெப்பமானது மிகுந்து காணப்படும். காற்றும் வேகமாக வீசுவதால் மூங்கில்கள் ஒன்றோடு ஒன்று உரசி தீப்பொறி எழும். அது அருகில் உள்ள மலைகள் வரைச் சுட்டெரிக்கும். அவ்வழிகள் கால்கள் நடந்து செல்வதற்கு தகுதியற்றதாகும். அக்கொடுமை -யான வழியில் மென்மைத் தன்மை உடைய தலைவியைத் தலைவன் தன் மார்பினால் மென்மையாக வளைத்தான். சொற்களால் தன் வயப்படுத்தினான். அதனை ~~[illegible]~~ நம்பி தலைவியும் உடன் போக்குச் சென்று என்னை வருந்திப் புலம்பச் செய்தாள்.

சங்க கால மக்களின் வாழ்க்கையை (வரலாற்றை) எடுத்துரைக்கும் நூல்களுள் சிறந்தது புறநானூறு. ஆகும். இந்நூல் பண்டைத் தமிழரின் போர், வீரம், அரசியல், ஆட்சிமுறை, நீதி, அறம், புகழ் கொடை, பண்பாடு போன்ற புறச் செய்திகளை விளக்குகின்றது. புலவருக்கும் அரசனுக்கும் இடையே இருந்த நட்பின் புலவன் அரசனை நல்வழி படுத்தியது போன்ற நிகழ்வுகளை 400 பாடல் மூலம் விளக்கியதால் புறநானூறு என்னும் பெயர் பெற்றது. இதுவும் புலவர் பலரால் பாடப்பட்ட தொகை நூல் ஆகும்.

முதல் பாடல் - கோவூர்க்கிழார்.

பாட்டுடைத் தலைவன் - நெடுங்கிள்ளி

சோழன் நெடுங்கிள்ளியிடம் வந்த இளந்தத்தனைக் கொல்லாமல் காப்பாற்றிய கோவூர்க் கிழாரின் பாடல் திறத்தைப் புலப்படுத்துக.

சோழ நெடுங்கிள்ளியே! பழுத்த மரங்களைத் தேடிச் சென்று பறவைகள் தம் பசியைப் போக்கிக் கொள்ளும். அதுபோல புலவர் நீண்ட நெடிய அரிய பல வழிகளையும் கடந்து வாரி வழங்கும் வள்ளலை நாடிச் சென்று தம் வறுமையைப் போக்கிக் கொள்வர் பரிசிலர்கள். அப்பரிசிலர்கள் தம் திருந்தாத நாவினால் அறிவுக்கு ஏற்றபடி வள்ளல்களைப் புகழ்ந்து பாடுவர். வள்ளல்கள் கொடுக்கும் பரிசிலைப் பெற்று மகிழ்வர். அவற்றைத் தம் மனம் கோணாமல் சுற்றத்தாருக்கும் கொடுத்து மகிழ்வர். அப்பரிசுப் பொருட்களில் தமக்கென எதையும் சேர்த்து வைக்க மாட்டார்கள். தாமும் உண்டு பிறருக்கும் கொடுத்து மகிழ்வர். தம்மைக் காப்போரால் பெறுகின்ற சிறப்புக்காக வருந்தி நாள்தோறும் அலைந்து திரிவதே இப்பரிசிலரின் வாழ்க்கை நிலையாகும். எவருக்கும் கொடுமை செய்யாதது இவர்களது தொழில் ஆகும்.

இப்பரிசிலர்கள் தம் கல்வித் திறத்தால் தம்மை மதிப்பவரை நாணம் அடையும்படி அவர்களை வெல்வர். அவ்விடத்தில் தமது கல்வி ஆற்றல் பெருமிதத்துடன் அமர்ந்து நடப்பர். உயர்ந்த புகழையுடைய இம்மண்ணுலகை ஆளும் செல்வமுடைய நும்மைப் போன்றவர்கள் இப்பரிசிலர்கள். இவர்களுடைய வாழ்க்கை எவருக்கும் துன்பம் செய்யாதது.

பெருஞ்சித்திரனார் வள்ளல் குமணனிடம் பெற்ற பொருளைத் தன் மனைவியிடம் கொடுத்துக் கூறியவை யாவை?

ஆசிரியர் – பெருஞ்சித்திரனார்

பாட்டுடைத் தலைவன் – குமணன்.

## பகுத்துண்ணும் பண்பு :

பலாப்பழங்கள் மிகுதியாக நிறைந்தது முதிர மலையாகும். அங்கு அரசனாக விளங்குபவன் வள்ளல் குமணன். அவன் திருந்திய வேலையுடையவன். அக்குமணன் எனக்கு பெரும் பொருளைப் பரிசிலாகக் கொடுத்தான். வீட்டிற்கு உரிமையுடைய மனைவியே இச்செல்வத்தை உன்மீது அன்புகொண்டு பழகும் மகளிர்க்கெல்லாம் கொடுப்பாயாக. பலவகைக் குணங்களுடன் மாட்சிமை பொருந்தியவர், உன்னுடைய சுற்றத்தார், மூத்த பெண்டிர், என அனைவருக்கும் கொடுத்து அவர்களது பசி நீங்கும்படி செய்வாயாக, மன்னர் தன்னை நாடி வரும் வறியவருக்கும் நமக்கு உதவியோருக்கும் கொடுப்பாயாக. இவர் இன்ன தன்மை உடையவர் என ஆராய்ந்து பார்க்காமல் அனைவருக்கும் பொருளைக் கொடுப்பாயாக. இப்பெருஞ்செல்வம் மன்னர் நம் வாழ்க்கைக்கு உதவும் என்று சேர்த்து வைத்துக் கொள்ளாமல் அனைவருக்கும் கொடுப்பாயாக.

இவ்வாறு பெருஞ்சித்திரனார் பலரும் பயன்பெறும்படி செல்வத்தைப் பகிர்ந்து கொடு எனத் தன் மனைவியிடம் கூறினார்.

சான்றோரின் இயல்புகளாகக் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறுவனவற்றைப் புறநானூற்றுப் பாடல் வழி விளக்குக.

## அமிழ்தத்தையும் பிறரோடு பகிர்ந்து உண்ணுதல் :

இந்திரன் அரசனாக ஆட்சி புரிவது மேலுலகம். அங்கு வாழ்பவர்கள் தேவர்கள். அவர்களுடைய உணவாக விளங்குவது அமிழ்தம். அவ்அமிழ்தம் கிடைக்கும் அதனைத் தனித்து உண்பவர் இவ்வுலகத்தில் எவரும் இலர்.

யாரோடும் வெறுப்புக் கொள்பவரும் இலர். பிறர் அஞ்சும் செயல்களுக்குத் தாமும் அஞ்சுவர். ஆயினும் அஞ்சத் தகும் பிறருடைய துன்பத்தைப் போக்க அயராது செயல்படுவர். புகழ் கிடைக்கும் என்றால் அதற்காகத் தம் உயிரையும் கொடுப்பர். உலகத்தையே முழுமையாக தந்தாலும் பழிப்பிற்குரிய செயலை ஒருபோதும் செய்ய -மாட்டார்கள். இத்தகு மனக்கவலை இன்றி இருப்பர். அவர்கள் தனக்கு என்னும் தன்னலத்துடன் இருக்கும் முயலமாட்டார். ஆயினும் பிறர் நலத்திற்கென அரிய பெரிய முயற்சியைத் தளராமல் மேற்கொள்வர். இத்தகைய சிறந்த குணங்களை உடைய சான்றோர் இருப்பதால்தான் இவ்வுலகம் அழியாமல் இன்றளவும் நிலை பெற்றிருக்கிறது.

கழைதின் யானையார் வல்வில் ஓரியை வாழ்த்திப் பாடிய திறத்தை விளக்குக.

ஆசிரியர் - கழைதின் யானையார்
பாட்டுடைத் தலைவன் - வல்வில் ஓரி.

கழைதின் யானையார் வல்வில் ஓரியை நாடிச் செல்கிறார் அவனிடம் இரவலர்க்கும் புரவலர்க்கும் உள்ள உயர்வு தாழ்வு -களைக் கூறுகின்றார்.

வள்ளலுக்கு கற்பித்தல்:

வல்வில் ஓரியே ஒருவரிடம் சென்று ஒரு பொருளைத் 'தா' என்று யாசித்துக் கேட்டல் இழிவுடையதாகும். அவ்வாறு கேட்டவருக்குக் கொடுக்க மாட்டேன் என்று மறுத்துக் கூறுவது அதை விட இழிவுடை -யதாகும்.

ஒருவன் தன்னிடம் வந்து யாசிப்பதற்கு முன்னே அவனுடைய முகக் குறிப்பை அறிந்து இப்பொருளை ஏற்றுக் கொள்வாயாக எனக் கொடுத்தல் உயர்வுடையதாகும். அதனை அக்கொடைப் பொருளை வேண்டாம் என்று மறுத்துக் கூறுதல் அதைவிட உயர்வுடையதாகும். தெளிந்த நீர்ப் பரப்பையும் ஒலிக்கும் அலைகளையும் உடையது கடல்நீர். அக்கடல் நீரை மிகுந்த தாகம் உடையவர் விரும்பி பருகமுடியாது எனவே அக்கடலை நோக்கிச் செல்லும் வழி எதுவும் இருக்காது

பசுக்கள் மாடுகள் சென்று கலக்கி உண்ட சேற்றுநீர் சிறுமை உடையது தான் ஆயினும் உண்பதற்குரிய அச்சேற்று நீரை பெறுவதற்காக செல்லும் வழிகள் பலவாகக் காணப்படும்.

## பரிசிலரின் பெருமை:

பரிசிலராகிய நாங்கள் நாடிச்சென்றோர் எங்களுக்கு பரிசில் கொடுக்காவிட்டாலும் அதற்கு அதிகமாக அவரைப் பழித்துப் பேசமாட்டோம். மேலும் அவர் மீது வெறுப்பும் கொள்ள மாட்டோம். மாறாக நாங்கள் பரிசில் பெறப் புறப்பட்டு வந்த நேரத்தில் வழியில் ஏற்பட்ட பறவை சகுனத்தையும் காலநேரத்தையும் பழித்துப் பேசுவோமே தவிர வள்ளலைப் பழித்துப் பேசமாட்டோம். கைம்மாறு கருதாது பெய்யும் மழை போல எப்பொருளையும் இல்லை என்னாது எல்லோருக்கும் கொடுக்கும் வள்ளல் ஆரியே நீ நீண்ட காலம் வாழ்வாயாக.

நினைக்கும் காலை மருட்கை உடைத்தே எனப் பொத்தியார் வியந்து பாடிய திறத்தைப் புலப்படுத்துக.

ஆசிரியர் - பொத்தியார்

பாட்டுடைத் தலைவன் - பிசிராந்தையார்

## சொன்ன சொல் பொய்க்காது:

பெருஞ்சிறப்புடன் வாழ்ந்த கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்ததை நினைத்துப் பார்த்தாலே வியப்பைத் தருகிறது. அளவிடற்கரிய பெரிய தலைமையுடன் உடனிருந்தவர் பிசிராந்தையார். அவர் அச்சிறப்புகளை விட்டு இவ்விடத்திற்கு வந்தது அதைவிட மிகப் பெரிய வியப்பைத் தருகிறது. பாண்டிய நாட்டில் தோன்றிய சான்றோனாகிய இப்பிசிராந்தையாரைப் போற்றுகிறேன். கோப்பெருஞ் சோழன் சொன்னச் சொல்லைப் பாதுகாத்து புகழ்மேம்பாடு அடையவும் நட்புக்குப் பெருமை

கோடைகையும் தன் நண்பன் துன்பமுற்ற காலத்தில் இவ்விடத்திற்கு வருவார் எனக் கோப்பெருஞ்சோழன் உறுதியாகக் கூறினான். அவன் சொன்ன சொல் பொய்த்துப் போகாதபடி பிசிராந்தையாரும் இவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார். இவ்வரு செயல்களும் நினைத்துப் பார்க்கும் பொழுதெல்லாம் பெரும் வியப்பைத் தருகின்றன. தன்னுடைய அரசாட்சி செல்லாத காலத்தில் வருகின்ற சான்றோனைத் தன் நண்பனாகப் பெற்றவன் கோப்பெருஞ்சோழன். அவனை ~~[illegible]~~ இழந்து தவிக்கும் இவ்வுலகம் மிகுந்த துன்பத்தை உடையது. அது மிகவும் இரக்கத்திற்குரியதாகும்